ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2104/16 - 2018 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2018.12.31

*2104/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 48 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வரும் ஒழுங்குவிதிகளைப் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, திசெம்பர் 31.

ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதி (செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகள் மீதான அறவீடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2019 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகளினூடாக அனுப்பப்பட்ட பெருந்தொகையான விளம்பரங்கள் மீது, ஒவ்வொரு செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திக்காகவும் 25 சதவீதத்தில் செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்திச் சேவைகள் மீதான அறவீடு (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறவிடப்படுதல் வேண்டும்.

3. செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி தொடர்பில் அறவிடப்படுகின்ற குறித்த அறவீடானது, குறித்த செல்லிடத் தொலைபேசி குறுஞ்செய்தியினூடாக விளம்பரம் செய்வதற்கு உட்கருதுகின்ற விளம்பரப்படுத்துநரினால் அத்தகைய செல்லிடத் தொலைபேசி குறுஞ்செய்திச் சேவையினை வழங்குகின்ற குறித்த செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

4. செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களினால் 2019, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் திரட்டப்படுகின்ற அத்தகைய அறவீடானது, அதனை அடுத்து வருகின்ற மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு (இதனகத்துக்குப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட தொகையினை ஆணைக்குழுவானது அது கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து 15 நாட்களுக்குள் திரட்டு நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

5. விளம்பரப்படுத்துநரினால் செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களுக்கு செலுத்தப்படுகின்ற அறவீடானது, அத்தகைய செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களின் வருமானத்தின் ஒரு பகுதியாக இருத்தலாகாது.

6. விளம்பரப்படுத்துநரின் பொருட்கள் அல்லது சேவைகளை மேம்படுத்துவதற்கு உட்கருதாது, காலத்திற்குக் காலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுகின்ற வாடிக்கையாளர் அறிவித்தல்கள், விழிப்புறுத்தல்கள், பருவகால வாழ்த்துக்கள் அல்லது அது போன்ற வாடிக்கையாளர்களுக்கான விசேட செய்திகள் மீது குறித்த அறவீடு ஏற்புடைமையாக்காது.

இத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக-

(i) "பெருந்தொகையான விளம்பரங்கள்" என்பது, வர்த்தக நோக்கங்களுக்காக ஒரு தொகுதியினரான பெறுநர்களுக்குச் செல்லிடத் தொலைபேசிகளினூடாக அனுப்பப்படுகின்ற செய்திகள் என்று பொருளாகும்.

(ii) "செல்லிடத் தொலைபேசிக் குறுஞ்செய்தி" என்பது, செல்லிடத் தொலைபேசிகளினூடாக அனுப்பப்பட்டவொரு செய்தி என்று பொருளாகும்.

(iii) "செல்லிடத் தொலைபேசி இயக்குநர்" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஓர் இயக்குநர் என்று பொருளாகும்.

(iv) "தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்று பொருளாகும்.

01-409

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.